பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 14 வியாழக்கிழமை 31.08.2023 அதிர்வு 31

## மின்சார வேலியில் சிக்கி தாய் பரிதாப உயிரிழப்பு

### மகனும் மகளும் பாதிப்பு

காட்டுப் பன்றியை வேட்டையாடுவதற்காகப் போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

04

# வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதா? ஏன்?

### இப்படிக் கேட்கிறார் பஸில்




கொழும்பு, ஓகஸ்ட் 31

“அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் திறமைமிக்கவர்கள் பலர் உண்டு. இந்நிலையில், மாற்றுக் கட்சி வேட்பாளரை நாம் ஏன் ஆதரிக்க வேண்டும்?

04






## ரணிலுக்கு ஆதரவு வழங்க நான் தயார்

### சஜித் அணி எம்.பி. வடிவேல் சுரேஷ் அதிரடி அறிவிப்பு

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். மலையகப் பெருந்தோட்ட மக்களுக்குக் காணி உரிமை வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுத்தால் ஒட்டுமொத்த மலையக மக்களுடன்

04

## இங்கு கொடூர சித்திரவதை; என்னைக் காப்பாற்றுங்கள்!

### சவூதிக்குப் பணிப்பெண்ணாகச் சென்ற மலையகத் தாய் கதறல்

“என்னை இங்கு (சவூதி) கொடூர சித்திரவதைக்கு உட்படுத்துகின்றனர். இங்கு இருக்க முடியாது. என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள்.” – இவ்வாறு கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்துள்ளார் மலையகத்

04

## அம்பலாங்கொடையில் இன்று துப்பாக்கிச் சூடு

அம்பலாங்கொடை பகுதியில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

04



## தேர்தலை ஒத்திவைத்தல் அடிப்படை உரிமை மீறல்!

### ஐ.நா. பிரதிநிதியிடம் சஜித் சுட்டிக்காட்டு

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் – அன்ட்ரூ ப்ரான்ஸ்’கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

04

## கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி 5ஆம் திகதி ஆரம்பம்

கொக்குதொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு பணிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இன்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் இணக்கத்துடன் இந்த முடிவு எட்டப்பட்டது.

04





## பொலிஸ் அதிகாரம் வழங்க ஜே.வி.பி. அடியோடு எதிர்ப்பு

### ‘13’ தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு அறிவிப்பு

“இலங்கையில் பொலிஸ்துறை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பில் எமது கட்சி உடன்படாது. ஆனால், காணி அதிகாரம் பற்றி பேச்சு நடத்துவதற்கு எமது கட்சி தயாராகவே உள்ளது.”

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்னவென்பதை ஜனாதிபதி ரணில்

04

# எரிபொருள்களின் விலைகளில் இன்றிரவு மாற்றங்கள் வரலாம்

நாட்டில் இன்றைய தினம் எரி பொருள்களின் விலைகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி, உலக சந்தையில் எரிபொருள் விலை ஏற்ற இறக்கம் என்பனவற்றின் அடிப்படையில் இந்த விலை மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை எவ்வாறெனி னும் கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது பெரிய மாற்றங்கள் வராது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எரிபொருள்களுக் கான விலைகளில் சிறு மாற்றத்தை எதிர் பார்க்க முடியும் எனவும், இன்று நள்ளி ரவு விலை மாற்றம் நடைமுறைப்படுத்தப் படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் சார்ஜன்ட், கான்ஸ்டபிள் கைது!



போக்குவரத்து விதிமீறலைத் தவிர்ப்பதற்காக 15,000 ரூபா இலஞ்சம் பெற்றார் எனக் கூறப் படும் யாழ். மல்லாகம் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ் டபிள் மற்றும் இலஞ்சம் பெறு வதற்கு உதவிய குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்டனர் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

ஜே.சி.பி. வகை இயந்திரத் தைச் செலுத்திய சாரதிக்கு அந்த வாகனத்தை ஓட்டுவதற்கு அனு மதிப்பத்திரம் இல்லாத காரணத் தினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுவதைத் தவிர்ப்ப தற்காக முதலில் 25,000 ரூபா இலஞ்சம் கேட்டார் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்-குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்குரிய பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதியிடமிருந்து 12,500 ரூபாவை பெற்றுக் கொண்டு மீதி தொகையை செலுத் தும் வரை சாரதியின் தேசிய அடை யாள அட்டையை தம் வசம் வைத் திருந்தார் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தோட்டாக்களுடன் மூன்று பேர் கைது!

துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக் களுடன் அலவத்துகொடையில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரி விக்கின்றனர்.

அலவத்துகொடையின் அக்குறணை நகரப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஓட்டோவை அவதானித்த புலனாய்வு பொலிஸ் அதிகாரி ஒருவர் அந்த ஓட்டோவில் பயணித்த நபர் ஒருவர் வீதியில் சென்ற நபரி டம் பொதி ஒன்றை வழங்குவதை அவதானித் துள்ளார்.

இதனால் சந்தேகமடைந்த புலனாய்வுத் துறை அதிகாரி குறித்த பொதியை சோதனை செய்ததில் இந்த தோட்டாக்கள் கண்டுபிடிக்கப் பட்டன.

பின்னர், இது தொடர்பில் அலவத்துகொடை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.




## மீசாலையில் 7 லட்சம் ரூபா பெறுமதியான தேக்க மரக் குற்றிகள் பொலிஸாரால் மீட்பு!

(த.சுபேசன்)



சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலம் மீசாலைப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (28) திங் கட்கிழமை 7 லட்சம் ரூபா பெறுமதியான தேக்க மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

கனகராயன்குளம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி டிப்பர் வாகனத் தில் கருங்கல் கிரவலுக்குள் மறைத்து எடுத்து வரப்பட்ட 22 தேக்க மரக் குற்றி களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். வாகன சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீசாலை பகுதியில் கடமையில் நின் றிருந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரே சந்தேக நபரைக் கைது செய்தனர்.

இதன்போது சந்தேக நபர் பொலிஸா ருக்கு 5 லட்சம் ரூபா லஞ்சம் வழங்க முற்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே கைது நடவடிக்கையை முன்னெடுத் திருந்தனர்.

# அம்பாறை மகா ஓயாவில் சமுர்த்தி ஆரோக்கிய உணவகம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் தேசிய உணவை பிரபலப் படுத்தும் நோக்கில் பயனாளிகளால் உற்பத்தி செய்யப்படும் மற்றும் தயாரிக் கப்படும் உணவுப் பொருள்களை விற் பனை செய்வதற்கென மகா ஓயாவில் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள் ளது.

சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் மற்றும் வியாபார மத்திய நிலைய கட்டடத் தொகுதியையும் அதன் சுற்றாடலையும் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந் தக அபேவிக்ரம அண்மையில் (25) பார்வையிட்டார்.

அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப் பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் விடுத்த அழைப்பின் பேரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டட தொகுதியை பார்வை யிட்ட அரச அதிபர், வாகனத் தரிப்பிடம் மற்றும் பொது வசதி தொகுதிகளையும் பார்வையிட்டார். இவருடன் மேலதிக அரச அதிபர் விமங்க செனவிரெட்ண வும் கலந்து கொண்டனர்.

# பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள தெமட்டகொட மக்களுக்கு உலர் உணவு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அஸீஸியா நிறுவனமும் ஜேர்மன்- முஸ்லிம் ஹெல்பன் நிறுவனமும் இணைந்து பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்தி லுள்ள தெமடகொட பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட மூவின மக்களுக் கும் உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளன.

இந்த நிகழ்வு அண்மையில் தெமட்ட கொட ஸ்ரீ சாம பௌத்த விகாரையில் இடம்பெற்றது.

பொருளாதார ரீதியில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஜீவ னோபாயத்தை இழந்துள்ள தெமட்டகொட பிரதேசங்களில்வாழும்300தமிழ்,முஸ்லிம் மற்றும் சிங்கள குடும்பங்களுக்கே இவ் வாறு உலர் உணவுப் பொதிகள் வழங்க- ப்பட்டன.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES 20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பொலிஸ் அதிகாரம்...

விக்கிரமசிங்க முதலில் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசமைப்பின் 13 ஆவது

திருத்தச் சட்டம் தொடர்பில் தற்போது வடக்கில் உள்ள கட்சியோ அல்லது தெற்கில் உள்ள கட்சியோ விவாதத்தை ஆரம்பிக்கவில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்கதான் ஆரம்பித்துவைத்தார். வடக்கில் உள்ள வாக்குகளை இலக்கு வைத்து அரசியல் முன்னெடுக்கப்பட்டுள்ள தந்திரோபாய அரசியல் நகர்வே இதுவாகும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதிலேயே ரணில் தீவிரமாக உள்ளார். ஏனெனில் ஏனைய உள்ளூராட்சி சபைத் தேர்தலோ, மாகாண சபைத் தேர்தலோ நடத்தப்பட்டால் அவற்றின் பெறுபேறுகள், தமக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவியைப் பெற்றுக்கொடுக்காது என்பது ரணிலுக்குத் தெரியும். எனவே, 13 ஐ முழுமையாக அமுலாக்கக்கூடிய தலைவர்தான் என்ற மாயையை உருவாக்கி அதன்மூலம் வாக்கு வேட்டை நடத்துவதற்கான அரசியல் உபாயமாகவே 13 குறித்த விவாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே, 13 தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை முதலில் ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்.

இரண்டாவது, மாகாண சபைத் தேர்தலை நடத்திய பிறகு 13 பிளஸா அல்லது அதிகாரக் குறைப்பா என்பது பற்றிப் பேசலாம்.

பொலிஸ் அதிகாரம் வழங்கக்கூடாது. ஏனெனில் இலங்கையில் பொலிஸ் என்பது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. மேல் மாகாண சபை முதலமைச்சராகப் பிரசன்ன ரணதுங்க இருந்தால், அவர் போன்றவருக்குப் பொலிஸ் அதிகாரம் சென்றால் என்ன நடக்கும்? இது வடக்கில் அல்ல தெற்கில் பிரச்சினையாக அமையும்.

காணி அதிகாரம் பற்றி கதைக்கலாம். தொல்லியல் இடங்கள் மத்திய அரசின் கீழ்தான் இருக்கும். மகாவலி, வனஜீவ ராசிகள் திணைக்களத்துக்குரிய காணி, ரயில்வே திணைக்களத்துக்குரிய காணி என்பன அரசின்கீழ்தான் இருக்கும். அதேபோல் வடக்கில் படையினர் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்." - என்றார்.

### கொக்குத் தொடுவாய்...

இந்த வழக்கு விசாரணைகளில் முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பிரணவன், சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன்,வி.கே.நிரஞ்சன், ரணித்தா ஞானராசா, வி.எஸ்.தனஞ்சயன், காணாமல் போனவர்களின் அலுவலகத்தினுடைய சட்டத்தரணிகளான எஸ்.துஷ்யந்தினி, ஜெ.தற்பரன், முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள், கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா.சண்முகதாசன், கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ் மா அதிபர் சமுத்திரஜீவ, முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் அசோக பெரேரா, கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர் பலரும் முன்னிலையாகியிருந்தனர்

இந்நிலையில் அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்புக்களுடன் அகழ்வு பணி முன்னெடுக்கப்படுவது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

### மின்சார வேலியில்...

அவரது மகளும், மகனும் மின்சாரம் தாக்கிப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் குருநாகல், நாகொல்லாகம - திம்பிரிவெவ பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

வீட்டில் வளர்த்த பூனையைக் காணவில்லை எனத் தாய், மகள், மகன் ஆகியோர் பூனையைத் தேடிச் சென்றபோது மின்சாரம் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகல்லாகம பகுதியில் வசித்து வந்த 58 வயதுடைய ஆர்.எம்.பிசோ மெனிகே என்ற பெண்ணே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

காட்டுப் பன்றிகளை வேட்டையாடுவதற்காகச்சட்டவிரோதமாகமின்சாரத்தைப் பயன்படுத்தினார் எனக் கூறப்படும் 56 வயதுடைய விவசாயி ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### வரும் ஜனாதிபதி...

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது தொடர்பில் எமது கட்சி தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளிவருவதற்கு முன்னரே தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. ஆனால், நாம் அவசரப்படாமல் பொறுமையாக இருக்கின்றோம். ஏனெனில் தேர்தலை எதிர்கொள்ள அச்சமில்லாத ஒரேயொரு கட்சி மொட்டுவே.

எதிர்க்கட்சிகளுக்குள்தான் வேட்பாளர்கள் தொடர்பில் போட்டி நிலவுகின்றது. எமது கட்சிக்குள் எந்தக் குழப்பமும் இல்லை. சில ஊடகங்கள் எதிர்க்கட்சிகள் போல் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு மக்களைக் குழப்ப முயல்கின்றன. மக்களுக்கு எல்லாம் விளங்கும்.

ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். அவர் எமது கட்சியின் உறுப்பினர் அல்லர். ஆனால், எமது கட்சியின் ஆதரவுடன்தான் அவர் ஜனாதிபதிப் பதவியில் உள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளிவந்தவுடன் தேர்தல் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்போம்." - என்றார்.

### இங்கு கொடூர...

தாயொருவர்.

சரஸ்வதி புஷ்பராஜ் என்ற தாயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இவர், இரத்தினபுரி மாவட்டம், எகலியகொட, பனாவல தோட்டத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இரு பெண் பிள்ளைகள் உட்பட மூன்று குழந்தைகள் உள்ளனர்.

அவர் வறுமை காரணமாக இவ்வருடம் ஜுலை 15 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

அவர் வேலை செய்யும் வீட்டில், வீட்டுக்காரர்களால் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார். உடலில் காயங்களும் ஏற்பட்டுள்ளன. உணவுகூட முறையாக வழங்கப்படவில்லை என்று தமது குடும்பத்தாருக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

தற்போது அவரின் தொலைபேசியும் வீட்டுக்காரர்களால் பறிக்கப்பட்டுள்ளது. அவரைச் சவூதிக்கு அனுப்பிய இலங்கையில் உள்ள முகவர்களையும் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாகச் சரஸ்வதியின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அழைப்பை எடுத்தால்கூட அவர்கள் பதிலதிப்பதில்லையாம்.

தன்னை எப்படியாவது காப்பாற்றுமாறு இலங்கையர்களிடம் கண்ணீர்மல்கக் கோரிக்கை விடுத்துள்ளார் சரஸ்வதி புஷ்பராஜ்.

### தேர்தலை ஒத்திவைத்தல்...

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் - அன்ட்ரூ ப்ரான்ஸ் இந்நாட்டில் தனது பணியை ஏற்றுக்கொண்டதன் நிமித்தமே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் விடயங்கள் தொடர்பில் இரு தரப்புகளுக்கும் இடையில் பல கருத்துக்கள் இங்கு பரிமாறப்பட்டன.

நாட்டில் நிலவி வரும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்குத் தெரியப்படுத்தினார்.

அவ்வாறே, தற்போதைய அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல்களை ஒத்திவைத்து அடிப்படை உரிமைகளை மீறி வருவது தொடர்பிலும் அவர் மேலும் தெரியப்படுத்தினார்.

### ரணிலுக்கு அதரவு...

அவருக்கு ஆதரவு வழங்கத் தயார்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

"எனக்கு கட்சி முக்கியமில்லை. எனது மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களே முக்கியம்." - என்றும் அவர் மேலும் கூறினார்.

### அம்பலாங்கொடையில்...

மோட்டார் சைக்கிளில் பயணித்த சிலர் வானில் பயணித்த ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இளைஞர் யுவதிகளுக்கு தொழில் சந்தை






(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், தம்பல காமம் பிரதேச செயலகத்தில் இளைஞர் யுவதிகளுக்குத் தனியார் துறையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் தொழில் சந்தை ஒன்று நேற்றுமுன் தினம் (29) நடத்தப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற தொழில் சந்தையை மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது. சேவை துறை, விருந்தி னர் விடுதி, தனியார் வைத்தியசாலை , நிதிசார் நிறுவனங்களின் வெற்றிடங்கள், வெளிக்கள உத்தியோகத்தர் வெற்றி டங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பற்றிய ஆலோசனைகள் போன்ற துறை களுக்கான நேர்முக தேர்வுகள் இடம் பெற்றன. இதில் சுமார் 10 இற்கும் மேற் பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டன.

வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதி களுக்கு அவர்களின் தகைமைக ளுக்கு ஏற்ப துறை சார் தொழில்களை வழங்குவதே இதன் பிரதான நோக்கமாக காணப்படுகிறது. இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், மனித வலு வேலை வாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிறுவனங்களின் உத்தியோகத்தர் இளைஞர் யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




# மாணவர்களுக்குப் போசாக்குணவு வழங்குதல் தொடர்பில் விழிப்புணர்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல். எம் றிபாஸின் வழி காட்டலில், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம் ரயீஸ் தலைமையில் ஆரம்ப பிரிவு மற்றும் இரண்டாம் நிலை பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கான காலை உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை முறைமைப்படுத்தும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற் பார்வை பொது சுகாதார பரிசோத கர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாட சாலையில் உணவு வழங்கும் நிகழ்ச்சி திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், சுகாதாரக் கழக மாணவர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு உணவு விநியோ கிப்பவர்கள் போன்ற பலர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உள்ளாட்சித் தேர்தலின் கதி

தமது அரசியல் இலக்கை நோக்கிய நகர்வில் எதிர்பார்த்தவாறு முன்னோக்கி முன்னேறுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க போன்ற 'கரிஸ்மா' மிக்க தலைவர் அல்லர் ரணில். வசீகரமான போக்கு கொண்டவர் என்றும் கூற முடியாது. போதாக்குறைக்குத் தேர்தல்களைக் கண்டு அஞ்சும் தொடைநடுங்கித் தலைவர் என்றும் பெயரெடுத்தவர்.

இவற்றுக்கு மத்தியில்தான் தாம் ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர், தமது அடுத்த பதவிக்காலத்துக்கான ஜனாதிபதி தேர்தலில் நின்று தாம் வெற்றி பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக இடைக்காலத்தில் எந்தத் தேசிய மட்டத் தேர்தலையும் நடத்துவதே இல்லை என்று அவர் தீர்மானித்தார். அதன்படி தேர்தல் ஆணையத்தினால் அறிவிக்கப்பட்டு, வேட்பாளர் நியமனப் பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை, நிதி அமைச்சர் என்ற முறையில் தமக்கு இருந்த நிதித்துறை அதிகாரங்களைப் பயன்படுத்தி வேட்டு வைத்துத் தடுத்தார் அவர்.

ஏற்கனவே நாட்டில் நடைமுறையில் இருந்த மாகாண சபை தேர்தலுக்கு நிரந்தரமாக ஆப்படித்து, கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேல் மாகாண சபைகள் மூலமான மக்களின் - பிரதிநிதித்துவத்துக்கு - நிர்வாகத்திற்கு - நிரந்தரமான மூடு விழா நடத்திய பிரதான பிரகிருதி இவரே என்பது நாடறிந்த உண்மை.

இச்சூழலில் மீண்டும் தொத்துப் பொறியில் தமக்குக் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை வைத்துக் கொண்டு, தேசிய ரீதியில் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை இறுதிக்கட்டத்தில் ரத்துச் செய்ய வைத்தமையினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரும் ஜனநாயக விரோதியாகவே பார்க்கப்படுவார் என்றே பலரும் நம்பினர். சுயலாப அரசியலுக்காக ஜனநாயகத்திற்கு சவக்குழி கிண்டுபவர் என்றே இலங்கை மக்கள் சமூகம் கருதும் எனப் பலரும் காணக்கிட்டனர்.

ஆனால் நிலைமை இன்று அதுவல்ல. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்தவர்கள் கூட அதை மறந்து விட்டனர். ஜனாதிபதி ரணிலின் பிரதான அரசியல் எதிரிகளான பெருந் தலைவர்கள் கூட அது குறித்து இப்போது அதிகம் பேசுவதில்லை. நீண்ட காலமாக நடக்காமல் விடுபட்ட மாகாண சபைத் தேர்தல் குறித்துக் கூட அனேகமானோர் அலட்டிக் கொள்வதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்தபடி எல்லோரும் அடுத்து நடைபெறக் கூடிய - அடுத்த ஆண்டில் நடத்தப்பட வேண்டிய - ஜனாதிபதித் தேர்தல் பற்றியே இப்போது அதிகம் பேசத் தலைப்பட்டு விட்டனர்.

ஜே.வி.பி. தனது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் என்று அநுர குமார திஸநாயக்காவை அறிவித்து விட்டது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை தனது ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துள்ளது. இனி என்ன, ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் அவர்கள் முழுமையாக மூழ்கி விடுவர்.

அரசு தரப்பில் இருந்த - இப்போதும் இருக்கின்ற - மொட்டுக் கட்சியின் இந்நாள் மற்றும் முன்னாள் அணிகளுக்கு இடையேதான் ஜனாதிபதி தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பதில் குழப்பம் நீடிக்கிறது. அவர்கள் கூட உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாதமை குறித்து அதிகம் அலட்டிக் கொள்பவர்களாகத் தெரியவில்லை.

ஆக, வேண்டுமானால் ஜே.வி.பி., ஐக்கிய மக்கள் சக்தி போன்ற எதிர்க்கட்சிகள் தமது ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரக் காலத்தில் ரணிலின் ஜனநாயக விரோதப் போக்கின் ஒரு வெளிப்பாடு என்று உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படாமையை விமர்சனம் செய்யும். அல்லது சர்வதேசப் பிரமுகர்களுடனான சந்திப்பில் அப்படிக் குறை கூறும். அவ்வளவுதான் நடக்கும்.

## நிரந்தர அமைதி வேண்டித் தல யாத்திரை நல்லூரில் இருந்து கொக்கட்டிச்சோலைக்கு

(த.சுபேசன் )

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த்திரு விழாவை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் வரை புனித திருத்தல தரிசன யாத்திரையை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கைத் திருநாட்டில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர வேண்டி மேற்படி யாத்திரை முன்னெடுக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் ஆலயத்தில் ஆரம்பிக்கும் தல யாத்திரை சிவலிங்கம் தாங்கிய ஊர்தி சகிதம் ஏ-9 வீதியூடாக பல ஆலய தரிசனங்களுடன் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த் திருவிழாவில் இணைந்துகொள்ளவுள்ளது.

திருத்தல யாத்திரையில் பங்குபற்றும் அடியார்கள் பாதணிகளை விடுத்துக் கலாசார விழுமிய உடை அணிந்து கலந்து கொள்ள வேண்டும் என்று இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபையினர் கேட்டுள்ளனர்.

## மின்சாரம் துண்டிப்பால் தண்ணீரின்றி 350 குடும்பங்கள் தவிக்கும் நிலைமை

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆர்.பி.கே.பிலாடேசனுக்கு உரித்தான மஸ்கெலியா புரவுன்ஷீக் தோட்ட புரவுன்ஷீக் பிரிவில் உள்ள குடி தண்ணீர் விநியோக திட்டதுக்கு வழங்கப்பட்டிருந்த மின் இணைப்பு பட்டியல் பணம் செலுத்தாத காரணமாக நேற்று முன்தினம் மின்சார சபையின் அதிகாரிகள் துண்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக அந்தப் பிரிவில் உள்ள 350 குடும்பம் குடி தண்ணீர் இன்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அங்கு உள்ள பாவனையாளர் கருத்து தெரிவிக்கையில் -

தோட்டத்தில் உள்ள குடியிருப்புத் தொழிலாளர்கள் பட்டியல் பணம் செலுத்த பட்ட போதும் அத் தோட்டத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் பட்டியல் பணம் செலுத்தாத காரணத்தால் - 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மின் பட்டியல் பணம் செலுத்தப்படாத காரணத்தால் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தோட்டநிர்வாகிகள்பாவிக்கும் நீர் பட்டியல் அனைத்தும் தோட்ட நிர்வாகம் கட்ட வேண்டும் எனவும் அப் பணம் கட்டினால் மட்டுமே மீள குடிதண்ணீர் பெற்று கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனைவியை வாள் முனையில் கடத்தி சென்றாராம் கணவன்!

தனது மனைவியை வாள் முனையில் கடத்தி சென்ற கணவனுக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், குடத்தனைப் பகுதியில் செவ்வாய்க் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மனைவி கணவனை விட்டு, பிரிந்து குடத்தனையில் உள்ள தனது தாய் வீட்டில் தங்கி இருந்துள்ளார்.

இந்நிலையில், மனைவி தங்கி இருந்த குடத்தனை வீட்டுக்கு வாளுடன் சென்ற கணவன் மனைவியை வாள் முனையில் கடத்தி சென்றுள்ளார்.

இது தொடர்பில் கடத்தப் பட்டபெண்ணின்தாயார்பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# கடலுக்கு இரையாகி வருகிறது சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள சாய்தமருது பிரதேச மக்களின் ஒரேயொரு பொழுதுபோக்கு தளமான கடற்கரை பூங்கா பாரிய கடலரிப்பால் நாளாந்தம் காவு கொள்ளப்பட்டு அதன் எல்லைச் சுவரையும் தாண்டி மிகவும் மோசமான நிலைக்கு உள்ளாகி வருகின்றது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னர் முழுமையாகச் சேதமடைந்த றியாலுல் ஜன்னா வித்தியாலயம் அமைந்திருந்த இடத்தில் பிரதேச மக்களதும், சிறுவர்களதும் பொழுது போக்குக்காக 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி இந்தக் கடற்கரை பூங்கா பொது மக்களின் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கடற்கரைப் பூங்காவை கல்முனை மாகநகரசபை முகாமைத்துவம் செய்து வருகின்றது.

அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான நிந்தவூர், அட்டப் பள்ளம், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது மற்றும் கல்முனை ஆகிய இடங்களிலுள்ள கடற்கரைப் பிரதேசம் கடலரிப்பால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடலையண்டியுள்ள பொது மக்கள் குறிப்பாக மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்து தவிக்கும் பரிதாபகரமான சூழ்நிலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடலரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் கடலரிப்பை தடுப்பதற்காக



இயற்கையாக கடலோரத்தில் வளர்ந்து காணப்பட்ட இராவணன் மீசை, எழுத்தாணிப்பூண்டு, தாளை, தென்னை ஆகிய கடற்கரையோர தாவர சாகியம் முற்றாக அழிந்துள்ளது.

கடற்கரை பூங்காவுக்குப் பின்புறமாகக் கடற்பரப்பில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர்களின் தோணிகள், படகுகள் மற்றும் இயந்திரப் படகுகள் என்பவற்றை தரித்து வைப்பதற்கு நிதந்தரமான இடமொன்று இல்லாமையால் மீனவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

கடலரிப்பு விடயமாக அவ்வப்போது அரசியல் வாதிகள், திணைக்கள உயர் அதிகாரிகள், மீன்பிடித் திணைகள அதிகாரிகள், கரையோர பாதுகாப்பு திணைக்கள உத்தியோஸ்தர்கள் பார்வையிடுகின்ற போதும் எந்த விதமான பயனும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருதமுனை மாணவர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் தேசிய மாணவர் சிப்பாய் படை அணி மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடி 38 ஆவது படைப்பிரிவில் நேற்று (29) நடைபெற்ற மாகாணமட்ட கனிஷ்ட தெரிவுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்தப் பாடசாலையின் தேசிய மாணவர் சிப்பாய் படை அணி மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கிய சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் எம்.ஜே. தாரிக் மற்றும் பாடசாலையின் அதிபர் எம்.எம்.எம். ஹிர்பகான் உட்பட பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர்கள்,



பிரதி அதிபர்கள் மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக செயற்பட்ட பாடசாலையின் கல்விச் சமூகத்தினர், பெற்றோர் அனைவருக்கும் பாடசாலை சமூகம் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.








# விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் வெளியீடு யாழ். பல்கலையில்

(நிதர்ஷன்)

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில், பி.விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஊடகத்துறையில் தனது ஐம்ப தாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வை உள்ளடக்கி பி. விக்னேஸ்வரன் இந்த நூலை உருவாக்கியுள்ளார்.

இலங்கையில் அவர் ஆற்றிய கலைப் பணிகள், வானொலியில் தயாரிப்பா ளராக, செய்தி வாசிப்பாளராக ஆற்றிய பணிகள், தொலைக்காட்சித் துறை யில் தயாரிப்பாளராக, பணிப்பாளராக பல்வகைமைச் சூழலில் அவருக்கி ருந்த வாய்ப்புக்கள், எதிர்கொள்ளப் பட்ட சவால்கள், புலம்பெயர் நாட்டில் ஊடகப் பணிகள் எனப் பலதரப்பட்ட விடயதானங்களை ஒன்றிணைத்து ஊடகத்துறைசார் ஆவணமாக, ஆயிரம் பக்கங்களுக்கு அண்மித்ததாக இந்த நூலை பி.விக்னேஸ்வரன் தந்துள்ளார்.

நிகழ்வுக்கான தலைமையுரையை யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதி பதி பேராசிரியர் சி.ரகுராமும், வரவேற் புரையை ஊடகக்கற்கைகள் துறை யின் தலைவர் பூங்குழலி சிறிசங் கீர்த்தனனும், நூலுக்கான வாழ்த்து ரையை யாழ். பல்கலைக்கழக முன்னை நாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும், அறிமுகவுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தாவும் நிகழ்த்தினர்.


அதனைத் தொடர்ந்து நூல் முதற் பிரதியை பி. விக்னேஸ்வரன் வழங்க ஐ.பி.சி.தமிழ் நிறுவன உரிமையாளர் க.பாஸ்கரன் பெற்றுக்கொண்டார். முதற்பிரதியை தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கலும் நடைபெற்றது. சில பாடசாலைகளுக்கு நூல் அன் பளிப்பாக வழங்கப்பட்டது.

நூலுக்கான ஆய்வுரையை அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும், நயப்புரையை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாப னத்தின் தமிழ்ப் பிரிவின் முன்னை நாள் பணிப்பாளர் எஸ்.விஸ்வநாத னும் வழங்கினர். ஏற்புரையை நூலாசி ரியர் பி. விக்னேஸ்வரன் ஆற்றினார். நன்றியுரையை ஊடகக் கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் டினேஸ் கொடுதோர் நிகழ்த்தினார்.





# செருக்கல்பதி சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா



சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள செருக்கல்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்சவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

காலை 6 மணிக்கு வசந்த மண்டப பூஜைகள் ஆரம்பமாகி காலை 9 மணிக்கு விநாயகர் சித்திரத் தேரில் ஆரோகணித்து நூற்றுக் கணக்கான பக்தர்கள் புடை சூழ தேரோட்டம் இடம்பெற்றது.

இதன்போது பக்தர்கள் கற்பூரச்சட்டி மற்றும் அங்கப் பிரதட்சனை செய்து நேர்த்திக் கடனங்களை நிறைவேற்றினர்.

# சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவூட்டல்





(நூருல் ஹுதா உமர்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் எதிர்கால திட்டங்கள், அஸ்வெஸ்ம வேலைத்திட்டம் தொடர்பில் திணைக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழு தலைவர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு நேற்று (30) அம்பறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி பாக்கியராஜா, மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவப் பணிப்பாளர்கள், சமுர்த்தி வலய உதவியாளர்கள், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழு தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காவிரி விவகாரத்தில் இரட்டை வேடம்: தி.மு.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!



தமிழகத்துக்கு உரிய தண்ணீரை வழங்க மறுக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசையும், காவிரி விவகாரத்தில் இரட்டை வேடம் போடும் மக்கள் விரோத தி.மு.க. அரசையும் கண்டித்து அ.ம.மு.க. சார்பில் செப்டம்பர் 5 ஆம் திகதி மன்னார்குடியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அந்த கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அ.ம.மு.க. கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் காவிரி நீரை நம்பி டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடியை செய்து வருகின்றனர்.

தற்போது மேட்டூர் அணையின் நீர் மட்டம் சரிந்து வரும் நிலையில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட மாட்டோம் என்று கர்நாடக காங்கிரஸ் அரசு சொல்லிவருவதால் குறுவைப் பயிர்கள் வாடும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனைப் பற்றி அக்கறை இல்லாமல் தேர்தல் கூட்டணி மட்டுமே முக்கியம் என்று சுயநல போக்குடன் தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.

காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி தமிழகத்துக்கு உரிய தண்ணீரை வழங்க மறுக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசையும், டெல்டா விவசாயிகளின் ஜீவாதார பிரச்சினையாக உள்ள காவிரி விவகாரத்தில் இரட்டை வேடம் போடும் மக்கள் விரோத தி.மு.க. அரசையும் கண்டித்து அ.ம.மு.க. சார்பில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி பெரியார் சிலை அருகில் வருகிற செப்டம்பர் 5 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றுகிறார்.

கர்நாடக காங்கிரஸ் அரசையும் மக்கள் விரோத தி.மு.க. அரசையும் கண்டித்து நடைபெறும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய, அமெரிக்க படையினர் கண்காணிப்பு கூட்டுப் பயிற்சி!




இந்திய மற்றும் அமெரிக்க கடற்படையினர் இணைந்து கடல்சார் ரோந்து மற்றும் கண்காணிப்புகூட்டுப் பயிற்சியை மேற்கொண்டுள்ளனர்.

இந்திய-பசிபிக்பெருங்கடலில்கடல்சார் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக அமெரிக்க கடற்படையினர் இணைந்து அவ்வப்போது கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், தற்போது இருநாட்டுப் படைவீரர்களும் இணைந்து கடல்சார் ரோந்து மற்றும் கண்காணிப்பு கூட்டுப் பயிற்சி மேற்கொண்டுள்ளார்.

அரக்கோணத்தில் உள்ள 'ஐ.என்.எஸ். ராஜாளி' கடற்படை விமான தளத்தில் ஒருவார காலம் இந்த பயிற்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியில், இந்திய கடற்படையின் 312 பி-81 என்ற போர் விமானமும், அமெரிக்க கடற்படையின் விபி 26 பி-84 என்ற போர் விமானமும் பயன்படுத்தப்பட்டன.

பயற்சியின் போது கடல்சார் ரோந்து மற்றும் கண்காணிப்பை மேம்படுத்துவது, கடலுக்குள் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் நடத்தப்படும் தாக்குதல்களை முறியடிப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இருநாட்டு வீரர்களும் பரஸ்பரம் பகிர்ந்துக் கொண்டனர்.

மேலும், கடல்சார் பாதுகாப்பில் உள்ள சவால்களும் அவற்றை எதிர்கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், போரின்போது திட்டமிட்டு செயல்படுவது, பயிற்சிகளை மேம்படுத்துவது, தளவாடங்களை கொண்டு செல்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

'இந்தியாவுடன் எங்களது நல்லுறவையும் திறமைகளையும் வளர்த்து கடல்சார் பாதுகாப்பை மேற்கொள்ள ஒரு வாய்ப்பாக இப்பயிற்சி அமைந்துள்ளது' என அமெரிக்க கடற்படையின் விபி-26 ஆவது பிரிவின் அதிகாரி லெப்டினென்ட் ரியான் ஸ்பியர் தெரிவித்துள்ளார்.

## குழந்தைகளுடன் ரக்ஷா பந்தன் கொண்டாடினார் பிரதமர் மோடி!

பிரதமர் மோடி நேற்று தனது இல்லத்தில் குழந்தைகளுடன் ரக்ஷா பந்தன் கொண்டாடினார். இதில் பல குழந்தைகள் தங்கள் ஆசிரியர்களுடன் பங்கேற்றனர்.

பிரதமரின் கையில் குழந்தைகள் ராக்கி கட்டினர். மோடியுடன் கலந்துரையாடிய குழந்தைகள் பாடல்களை பாடினர். மக்களுக்கு பயனளிக்கும் அரசு திட்டங்கள் உட்பட பல தலைப்புகளில் பாடல் எழுதுவது பற்றி ஆராய வேண்டும் என பாடசாலை குழந்தைகளை அவர் ஊக்குவித்தார்.

ரக்ஷா பந்தனை முன்னிட்டு, சமூக ஊடகத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் ரக்ஷா பந்தன் வாழ்த்துகள். சகோதரிக்கும் சகோதரனுக்கும் இடையிலான சிதைக்க முடியாத நம்பிக்கை மற்றும் அளவற்ற அன்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த ரக்ஷா பந்தன் பண்டிகை, நமது கலாச்சாரத்தின் புனிதமான பிரதிபலிப்பாகும். இந்த விழா அனைவரின் வாழ் விலும் அன்பு, நல்லிணக்கம் மற்றும் நட்புணர்வை ஆழப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன் என குறிப்பிட்டி ருந்தார்.

# ரஷ்யாவை எதிர்கொள்ள உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்புகிறது அமெரிக்கா!



ரஷ்யா – உக்ரைன் இடையிலான போர் ஒன்றரை ஆண்டுகளாக தொடர்ந்து வருகிற நிலையில், உக்ரைனுக்கு போரில் உதவ 250 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் வழங்கப்படும் என அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

நிலக்கரி சுரங்க பயன்பாட்டுக்கான உபகரணங்கள், இயந்திரத் துப்பாக்கிகள், ஏவுகணைகள், போர் மருத்துவ உபகரணங்கள், உதிரி பாகங்கள் உள்ளிட்டவை வழங்கப்பட உள்ளன.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைனின் அடிப்படை உள்கட்டமைப்பை ரஷ்யா தரைமட்டமாக்கியது. இந்தத் தாக்குதலில் உக்ரைனில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் போரில் உக்ரைனில் ஆயிரம் பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன என யுனிசெப் தெரிவித்துள்ளது.

ஒன்றரை ஆண்டுகளாக ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்துகிறது. எனினும், ரஷ்யாவை எதிர்கொள்ளும் வகையில் உக்ரைனிடம் இராணுவக் கட்டமைப்பு இல்லை. இந்நிலையில், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கி உதவுகின்றன.

உக்ரைனுக்கு அமெரிக்கா கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இதுவரையில் 43 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் வழங்கியுள்ளது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு மேலும் 250 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் வழங்கப்படும் என அமெரிக்க பைடன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஏ.ஐ.எம் – 9 எம் ஏவுகணைகள், ரொக்கெட் லோஞ்சர், வெடிமருந்துகள் உள்ளிட்ட ஆயுதங்கள் அமெரிக்காவின் ஆயுத இருப்பிலிருந்து வழங்கப்பட உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜோ பைடன் மனநிலை பாதிக்கப்பட்டவர்: டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக விமர்சனம்




அமெரிக்காவில் அடுத்த வருடம் மீண்டும் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், தற்போதைய ஜனாதிபதியான ஜனநாயக கட்சியை சேர்ந்த ஜோ பைடனும், அவருக்கு போட்டியாக களமிறங்க துடிக்கும் டொனால்ட் ட்ரம்பும் ஒருவரையொருவர் சமீப காலமாக கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

சில நாட்களுக்கு முன் ஒரு வழக்கில் சிறை சென்று சில மணி நேரங்களில் பிணையில் டொனால்ட் ட்ரம்ப் வெளி வந்தார் .

இதன்போது சிறைச்சாலை விதிமுறைகளின்படி 'மக் ஷொட்' எனப்படும் புகைப்படம் எடுக்கப்பட்டார். அந்த புகைப்படங்களை ட்ரம்ப் தனது சொந்த வலைதளத்தில் அனைவரின் பார்வைக்கும் வெளியிட்டிருந்தார்.

இந்த புகைப்படம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் போது, நான் அதனை தொலைக்காட்சியில் பார்த்தேன். டிரம்ப் சிறப்பான தோற்ற முடையவர் என ட்ரம்பை கேலி செய்யும் விதமாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ட்ரம்ப், பைடனை விமர்சித்து பேசும் ஒரு காணொளி வெளியாகியுள்ளது.

அதில், கெட்ட எண்ணம் படைத்தவர் ஜோ பைடன். அவர் திறமையற்றவர் மட்டுமல்ல, சீரான மனநிலையை இழந்தவர் என நான் நம்புகிறேன்.

மனநிலையை இழந்தவராக நாட்டை நரகத்தை நோக்கி நகர்த்தி, ஒரு காரணமும் இல்லாமல் அமெரிக்க மக்கள் மீது 3 ஆவது உலகப்போரை திணித்து விடுவார் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## இழப்பீடு கோரும் விமான நிறுவனங்கள்!

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் குழப்பத்தால் ஐரோப்பா முழுவதும் சுமார் இரண்டாயிரம் விமானங்கள் ரத்து செய்யப் பட்டுள்ளதால், இழப்பீடு சீர்திருத்தத்தை விமான நிறுவனங்கள் கோரியுள்ளன.

கடந்த மூன்று நாட்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட் டுள்ளன. ஒரு மணி நேர வான் கட்டுப்பாட்டு அமைப்பு செயலிழந்ததைத் தொடர்ந்து, ஆயிரக் கணக்கான பயணிகள் தவித்துள்ளனர். உணவு, தங்குமிடம் மற்றும் மாற்றுப் பயணத்திற்கான செலவுகளை வாடிக்கையாளர்கள் திரும்பப் பெறுவதால், விமான நிறுவனங்களுக்கு 100 மில்லியன் பிரித்தானிய பவுண்டுகள் வருவாய் இழப்பு ஏற்படும் என்று தொழில்துறை அமைப்பு கணித்துள்ளது.

இந்த கோளாறு ஏற்பட்டமையால் விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பு சிறிதளவு நிதியை கூட கொடுக்க வில்லை என்றும் அந்த அமைப்பின் இயக்குனர் ஜெனரல் வில்லி வால்ஷ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தாமதங்கள் மற்றும் ரத்துசெய்தல்களுக்கு பொறுப்பானவர்கள் பயணிகள் இழப்பீடு எவ்வாறு கையாளப்படுகிறது என்பதை இங்கிலாந்து பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




### லங்கையில் காணாமல் போன பத்திரிகையாளர்கள்:

# போருக்குப் பின்னரான ஊடக சுதந்திரம் !

**இலங்கையில் காணாமல் போன பத்திரிகையாளர்களுக்கு நீதி கிடைக்குமா? இலங்கையில் ஊடக சுதந்திரம் போருக்குப் பின்னரான அரசியலில் புறக்கணிக்கப்பட்ட பரிமாணமாக இருப்பதை அலசும் ஆய்வுக் கட்டுரை**

**- நவீனன் -**

போருக்குப் பின்னரான கடந்த பத்தாண்டுகளில் இலங்கைப் பத்திரிகையாளர்களின் வாழ்க்கை என்பது இரத்தத்தாலும் காயங்களாலும் எழுதப்பட்டிருக்கிறது. அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பத்திரிகையாளர்களின் நிலை என்ன என்பதை அறியாமல் கொலை செய்யப்படும் அளவுக்குக் கொண்டு சென்றதும் வரலாறாகும்.

அரசின் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்து தங்கள் குரல் வளைகள் நெரிக்கப்பட்ட நிலையிலும் இறுதி வரை போராடி வந்த கடந்த காலப் பத்திரிகையாளர்களே இந்தப் போராட்டச் சூழலில் மக்களின் நம்பிக்கை குரல்களாக அடையாளம் காணப்பட்டு இருக்கின்றனர்.

பத்திரிகையாளர்கள் எதிர்கொண்ட கடினமான தருணங்களை தற்போது நினைவுகூர வேண்டியது காலத்தின் அவசியமாகும்.

போருக்குப் பின் ஊடக சுதந்திரம்

இலங்கையில் ஊடக சுதந்திரம் போருக்குப் பிந்தைய சூழலில் அரசியலில் புறக்கணிக்கப்பட்ட பரிமாணமாகவே இன்னமும் காணப்படுவதாக சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது. உலகில பத்திரிகைச் சுதந்திரம் குறித்து 180 நாடுகளைக் கணக்கில் கொண்டு அண்மையில் வெளியிடப்பட்ட சர்வதேசப் பட்டியலில் இலங்கை 165 ஆவது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின் அமைதிக்காக பத்திரிகையாளர்கள் மிகவும் அழுத்தமான பிரச்சினைகளுக்கு தள்ளப்பட்டுள்ளனர். பேச்சு சுதந்திரம் என்பது ஊடகச் சூழலில் கருத்து வேறுபாடுகளை அமைதிப்படுத்தப் பயன்படுத்துவதாகும். யுத்த காலத்தை விட இரகசியமாக ஊடகத் துறைகளிலும் குழப்பம் நிலவுகிறது.

அத்துடன் ஊடகத்துறையில் அரசின் அழுத்தம், தணிக்கை போன்றவற்றால் தடைகளைத் தாண்டி நேர்த்தியான போக்கை கடைப்பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

### கொலையான ஊடகர்களுக்கு நீதி கிடைக்குமா ?

2000 முதல் 2010 வரையிலான ஆண்டுகளில் இலங்கை வீதிகளில் உலாவரும் வெள்ளை வான்களும் திடீரென தொலைந்து போகும் பத்திரிகையாளர்களும் மிக எளிதாகக் கடந்து போகக் கூடிய ஒரு நிகழ்வுகளாக இருந்தன.

பத்திரிகையாளர்கள் அரசுக்கு எதிரானவர்களாகச் சித்திரிக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டிருக்கின்றனர். மயில்வாகனம் நிமலராஜன், பிரகீத் எக்னலிகொட, சிவராம் தராக்கி, கெய்த் நோயார், லசந்த விக்கிரமதுங்க, போடல ஜெயந்தா என அநீதி இழைக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் பட்டியல் பெரிதாகும்.

தராக்கி என்ற புனைப்பெயருடன் எழுதிவந்த தமிழ் ஊடகவியலாளர் சிவராம், அரசுக்கு எதிராக எழுதிய தன்னுடைய ஊடக நண்பர் நடேசன் கொலை செய்யப்பட்டபோது, அரசின் அடுத்த குறி தானாக இருக்கலாம் என்று நண்பர்கள் பலர் தன்னை எச்சரித்ததாகக் காணொலி ஒன்றில் பதிவுசெய்திருந்தார்.

அவர் பதிவிட்டதைப் போல, 2005 ஏப்ரல் 28 அன்று வெள்ளை வானில் கடத்தப்பட்ட சிவராம் அடுத்த நாள் கொலையுண்ட நிலையில் சடலமாகக் கிடைக்கப் பெற்றார். இதே போல் கொல்லப்பட்ட மற்றொரு பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க. தான் கொல்லப்படப் போகிறோம் என்பதை அறிந்த லசந்த, தனது இறுதி தலையங்கத்தைத் தன் இறப்பிற்குப் பிறகு பிரசுரிக்கச் சொல்லி தனது ஊடக ஊழியர்களிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

2,500 வார்த்தைகளைக் கொண்ட அந்தத் தலையங்கத்தை அவர் தனது அலுவலகக் கணினியில் 'ஃபைனல் எடிட்' (Final Edit) எனக் குறிக்கப்பட்ட கோப்பில் சேமித்து வைத்திருந்தார். அவர் கொலையின் பின்னர் அந்த 2,500 வார்த்தை தலையங்கத்தை உலகின் முன்னணிப் பத்திரிகைகள் அனைத்தும் பிரசுரித்தன.

"எனது படுகொலை, சுதந்திரத்தின் தோல்வியாகக் கருதப்படாது, உயிர் பிழைப்பவர்களுக்கு ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று அந்தத் தலையங்கத்தை முடித்திருந்தார் லசந்த விக்கிரமதுங்க.

(13ஆம் பக்கம் பார்க்க)

# போருக்குப் பின்னரான ஊடக சுதந்திரம்!

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

போடல ஜெயந்தா, கெய்த் நோயார் போன்றோர் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24, ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் காணாமல் போன கார்ட்டூனிஸ்ட் பிரகீத் எக்னலிகொடவின் நிலை என்னவென்று இன்றுவரை தெரியவில்லை.

### ஆட்கடத்தல்களும் காணாமல் போதலும்

இலங்கையில் ஆள்கடத்தல்களும் காணாமல் போதலும் 1980 ஆம் ஆண்டில் இருந்தே தொடர்ந்த வண்ணம் உள்ளன. இலக்கத் தகடு அற்ற வாகனங்களில் (வெள்ளைவான் குழு) வரும் இனம் தெரியாத குழுக்களால் பலவந்தமாக இந்த வாகனங்களுக்கு ஏற்றப்பட்டம் நபர்கள் பின் காணாமல் போயினர்.

போர் நடந்த வருடங்களில் இலங்கையில் பலநூற்றுக் கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளார்கள். உலகில் இலங்கையிலேயே அதிகமானோர் காணாமல் போவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.


காணாமல் போவதற்கு அரசே காரணம் என பல காணாமல் போனவர்களின் உறவினர்களும் சாட்சியங்களும் கூறிய போதும் அரசு எந்தவித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், இத்தகைய குற்றசெயல்களை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணையங்கள் சரிவர தமது வேலையை செய்யவில்லை என்று அதைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட சர்வதேச சுயாதீன குழு தெரிவித்துள்ளது.

### தேசிய நல்லிணக்கத்துக்கு ஊடக சுதந்திரம்

ஊடக சுதந்திரம் தேசிய ஒருமைப்பாட்டின் நல்லிணக்கத்துக்கு ஒரு காரணியாகும். போர் முடிவுற்ற பின்னர் தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு ஒரு தேசிய செயற்றிட்டத்தை அறிவித்தது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஒரு பின்னர், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டதும் அறிந்ததே.

ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் ஆரம்பத்தில் அவநம்பிக்கை காணப்பட்டது. இறுதி யுத்தத்தின் போது, வடக்கு- கிழக்கு மக்கள் படும் துன்பங்கள் தொடர்பில் பல்வேறு தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

ஆயினும் நல்லிணக்க ஆணைக்குழு 2011 நவம்பரில் 400 பக்கங்களுக்கும் அதிகமான அறிக்கையை சமர்ப்பித்திருந்த போதிலும், இரண்டு பக்கங்களுக்கு மேல் ஊடகங்கள் பற்றி குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும், ஊடகங்கள் பற்றி செய்யப்பட்ட சில பரிந்துரைகள் மிகவும் ஆழமான கண்ணோட்டத்தில் இருந்தன.




கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதானதாக்குதல்களைவிசாரித்துதகுந்த தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. ஊடகவியலாளர்களின் நடமாடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டதுடன், தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்தும் குறிப்பிடப்பட்டது.

நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவை மற்றும் பரிந்துரைகளில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான அவதானிப்புகள் மற்றும் ஊடகத்துறையின் அவதானிப்புகளும் முக்கியமானவை.

### கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை

கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை ஆகியவை சர்வதேச அளவில் அடிப்படை மனித உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டு, எந்த நல்லிணக்கச் செயல்முறையிலும் இரண்டும் முக்கியப் பங்காற்றுகின்றன. எனவே, ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் ஊடக சுதந்திரத்தை மேம்படுத்துவதும், அடிப்படை உரிமைகளுக்கு ஏற்ப அதைப் பாதுகாப்பதும் அவசியம்.

ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது பல்வேறு இனங்களுக்கிடையில் அவநம்பிக்கையையும் அச்சத்தையும் ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அழுத்தங்களைத் தவிர்ப்பதற்காக தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இது ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துதல் மற்றும் நல்லிணக்க ஏற்பாடுகளின் அழுத்தங்களைப் பிரயோகிப்பது போன்றவற்றை பாதிக்கலாம்.

குற்றவியல் சட்டத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகள் போன்ற பாதகமான சட்ட நடவடிக்கைகள் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

### அனைத்துலக சட்டம்

அனைத்துலகச் சட்டத்தின் கீழ் ஒரு நபரை கைது செய்து அவரது கைதை மறுக்கும் போதும், அவர் வைக்கப்பட்டுள்ள இடத்தை மறைக்கும் போதும் பலவந்தமான காணாமல் போதல் இடம் பெறுகின்றது. காணாமல் போதலானது பொதுவாக சித்திரவதை, நீதிக்குப் புறம்பான கொலையை மேற்கொள்வதற்காகவே இடம் பெறுகின்றது.

இலங்கையில் போரின் போது கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள், காணாமல் போன பத்திரிகையாளர்கள் குறித்து மறுவிசாரணை நடத்தப்படும் என்று முன்னாள் அதிபர் மைத்ரிபால 2016 சிறீசேனா தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்குகளில் இதற்கு முன்பு விசாரணை நடைபெற்றபோதிலும், குற்றவாளிகள் யாரும் தண்டிக்கப்படவில்லை.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலின்போது எதிர்க் கட்சிகளுக்காக பிரச்சாரம் மேற்கொண்ட பிரகீத்ஏக்னாலிகோடா என்ற கார்ட்டூனிஸ்ட் திடீரென காணாமல் போனார். அவரது நிலை இதுவரை கண்டறியப்படவில்லை. கடந்த காலங்களில் கொலை செய்யப்பட்ட, காணாமல் போன பத்திரிகையாளர்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் குறித்து மறுவிசாரணை நடத்த புதிய அரசு முயற்சித்தது.


### காணாமல் போன மனிதவுரிமை பணியாளர்கள்

இலங்கை வடக்கு கிழக்கு தமிழர் வாழ் பகுதிகளில் யுத்த அனர்த்தங்களால் பொது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்ட தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களும் கடத்தப்பட்டு காணாமல் போனதும் கொலைச் செய்யப்பட்டனர்.

மக்களுக்காக பணியாற்றிய தமிழர் புணர்வாழ்வுக் கழக பணியாளர்கள் மற்றும் மனிதவுரிமை பணியாளர்கள் 57 பேர் கடத்தப் பட்டு கொலை செய்யப்பட்டனர். இந்த விவரத்தை ஆசிய மனிதவுரிமை ஐ.நா. ஆணையம் மூலம் வெளியிட்டது. இவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ராஜபகஷ தலைமையிலான அரசு ஆட்சியில் இருந்த போது பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவியது. குறிப்பாக, விடுதலைப் புலிகள் அமைப்பினரோடு நடைபெற்ற இறுதிப் போரின்போது, பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நாடுகளில் இலங்கை முன்னிலை வகித்தது.

பத்திரிகைச் சுதந்திரம் குறித்து 180 நாடுகளைக் கணக்கில் கொண்டு அண்மையில் வெளியிடப்பட்ட சர்வதேசப் பட்டியலில் இலங்கை 165ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949